1991 சனவரி 24]

மஹாராஷ்ட்ராவிலே இருக்கக் கூடிய ஒரு சட்டம் இது சம்பந்தமாக மிகத் தெளிவாக இருக்கிறது. இது போன்ற பொதுக் காரணங்களுக்கு நிலம் கையகப்படுத்துகிறபோது நிலம் கையகப்படுத்துவதுபற்றிக் கேள்வி கேட்கமுடியாது. அதற்கு நஷ்டஈடு என்ன என்பதைப் பற்றி வேண்டுமானால் வழக்குத் தொடரலாம் என்ற அளவிலே மிகத் தெளிவாக இருக்கிறது. அதனுடைய அடிப்படையிலே நிலக் கொள்கை சம்பந்தமாக நிலம் எடுப்பது சம்பந்தமாக, ஒரு விரைவான சட்டத் திருத்தம் கொண்டு வந்து, இது போன்ற பொதுப் பணிகளை முடுக்கி விடுவதற்கு அரசு ஆலோசனை செய்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்தனையோ சட்டங்கள் கொண்டுவந்தாலும், அதிலேயும் ஒரு இடைவெளியைக் கண்டு பிடித்து அதிலேயே போய் மீண்டும் எப்படியாவது நீதிமன்றத் திலே அதற்கு ஒரு ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். கோர்ட்டு பற்றி இப்போது சொல்லக் கூடாது என்று சொல்வார்கள். பல் வேறு சிக்கல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும் திரு வரதராசன் அவர்களின் அந்த எண்ணம் அரசுக்கும் உண்டு. அதிலேயும் அரசு முனைந்து கொண்டிருக்கிறது.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதுரை நகரத்தைச் சுற்றி வட்ட சாலை அமைப்பதைப் போல, வளர்ந்துவரும் தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய இதர நகரங்களிலும் அதனுடைய நெருக்கடியை முன் கூட்டியே கணக்கில் எடுத்து அதற்கான நிலம் எடுக்கிற பணி களைச் செய்து, அந்த வட்டச் சாலைகளை அமைக்க அரசு முன்வருமா? குறிப்பாக, கோவை, திருப்பூர், திருச்சி போன்ற முக்கிய நகரங்கள் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன. அந்தப் பகுதிகளை எல்லாம் கணக்கில் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அர்பன் டெவலப் மெண்ட் நிறுவனம் மூலம் மிக முக்கியமான நகரங்களிலே இப்படிப் பட்ட சாலைகளை அமைப்பதற்கும் மற்ற மாற்றுச் சாலைகளை அமைப்பதற்கும், பை பாஸ் சாலைகளை அமைப்பதற்கும் ஒரு திட்டம் தீட்டி கோவை, மதுரை, நெல்லை, திருச்சிராப் பள்ளி என்று மிக முக்கியமான நகரங்களை ஏ, பி, சி, மூன்று பிரிவுகளாகப் பிரித்து எடுத்திருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்கள் சில நகரங்களை இனம் பிரித்திருக்கிறார்கள். அதற்குத் தக்கபடி வரும். திரு. கோவிந்தசாமிக்கு இப்போது மேம்பாலம் வந்திருக்கிறது.